நாள்: 10.04.2026
OS. 206/2022
பெயர் தூயமணி
வா.சா.1

<u>குறுக்கு விசாரணை</u>

நான் சென்னையில் உள்ள பாரத் பல்கலைகழகத்தில் துணைவேந்தராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேள். நான் வருமான வரி செலுத்தும் நபர் என்றால் சரிதான். பிரதிவாதி என்ன எதிர்வாதம் செய்து வருகிறார் என்று எனக்கு தெரியும். எனக்கு சொந்த ஊர் கம்பம். பிரதிவாதியின் சொந்த ஊர் கூடலூர். பிரதிவாதி எனக்கு தூரத்து உறவினர் என்றும். அவரை எனக்கு 20 ஆண்டுகளாக தெரியும் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பழக்கத்தின் 29.09.2019 ம் தேதி ரூ.5,00,000/– வீரசேகருக்கு கடன் கொடுத்தாக சொல்லியுள்ளேன். பணம் திருப்பி தராததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 29.09.2019 க்கு முனனர் எனக்கும், பிரதிவாதிக்கும் நடைபெற்ற வரவு செலவு பற்றி பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஏனெனில் முடிந்த வரவு செலவு என்பதால் சொல்லவில்லை. முந்தைய வரவு செலவு என்பது 18.05.2016 ம் தேதி என்னிடம் பிரதிவாதி வாங்கிய 10 லட்சம் சம்பந்தமான வரவு செலவு என்றால் சரிதான். ஆனால் தேதி ஞாபகம் இல்லை. அந்த கடனுக்கு ஆதரவாக என்னிடம் காட்டப்படும் பதிவு செய்யப்படாத ஈடு கடன் ஆவணம் 5 லட்சத்திற்கும்,மீதமுள்ள 5 லட்சத்திற்கு 2 புரோநோட்டு, 2 காசோலை கொடுத்தார் என்றால் ஈடுகடன் ஆவணம் என்னிடம் காட்டப்படுவது உண்மைதான். ஆனால் 10 லட்சத்திற்கு புரோநோட்டு கொடுத்தார்.

பிரதிவாதி என்னிடம் கொடுத்த கூடலூர் பாரத ஸ்டேட் வங்கியில் ரூ.5 லட்சத்திற்கு 14.12.2018 தேதியிட்ட காசோலை கொடுத்து அந்த காசோலை எண்.856300 வங்கியில் வசூலுக்கு போட்டபோது அவர் stop payment கொடுத்ததால் காசோலை திருப்பப்பட்டது என்றால்சரிதான். நான், என் மகள் பிரியதர்ஷினி, என் உறவினர் மக்கள்அன்பன் ஆகியோர்கள் பிரதிவாதி வீட்டிற்கு சென்று மிரட்டியதாக கூடலூர் வடக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். ஆனால் அதற்கு முந்தைய நாள் உத்தமபாளையம் காவல்துறை துணை கண்பாணிப்பாளரிடம் புகார் கொடுத்து அவர் அந்த மனுவை விசாரணைக்கு அனுப்பிய நிலையில் பிரதிவாதியின் மனைவி பொய் புகார் கொடுத்தார்.

புகாரானது 14.12.2018 ல் கொடுக்கப்பட்டதற்கான மனு ஏற்பு ரசீது என்னிடம் காட்டப்படுவது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காசோலை Stop payment என நிறுத்தப்பட்டது சம்பந்தமாக தான் நான் DSP யிடம் புகார் கொடுத்தேன். புகாரின் அடிப்படையில் எங்களை DSP விசாரித்தார் என்றால் சரிதான். விசாரணையில் எங்களிடம் தனித்தனியாக வாக்குமூலம் பெற்று அதில் நாங்கள் கையெழுத்து போட்டோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் நான் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.1 ஆகும். கூடலூர் SBI cheque No. 955404 ன்படி 5 லட்சத்திற்கான காசோலையை வங்கியில் வசூல்

செய்து கொள்கிறேன் என பேசி முடிக்கப்பட்டது. அதன் படி நான் 5 லட்சத்தை வங்கியில் இருந்து பெற்றுக்கொண்டேன். .ஏற்கனவே 5 லட்சம் பெற்றுக்கொண்டதால் காசோலை படி 2 புரோநோட்டு, 2 காசோலை, 1 பதிவு செய்யப்படாத ஈடுகடன் பத்திரத்தை கொடுத்துவிட்டேன். அதே தேதியில் என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தை வீரசேகர் DSP அலுவலகத்தில் கொடுத்தார். அது பி.சா.ஆ.2 ஆகும். 01.06.2019 ம் தேதி மக்கள்அன்பன், பிரதிவாதிக்கு என் மாமாவிடம் இருந்து 5 லட்சத்தை அவர் வாங்கி கொடுத்தது சம்பந்தமாக எழுதிக்கொடுத்த statement தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அது 10 லட்சம் சம்பந்தமான முந்தைய கடனுக்குரியது. அதற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் கிடையாது. அது பி.சா.ஆ.3 ஆகும்.

01.06.2019 வரை எங்களுக்குள் பணம் வரவு செலவு சம்பநத்மாக பிரச்சனை ஏற்பட்டு அவரது மனைவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, அதற்கு பின் நான் DSP அலுவலகத்தில் புகார் கொடுத்து பணம் வசூல் செய்யப்பட்டது என்றால் சரிதான். பணம் வரவு செலவு சம்பந்தமாக எனக்கும், பிரதிவாதிக்கும் மன வருத்தம் இருந்தது என்றால் இல்லை. காசோலை திருப்பப்பட்டவுடன் நான் நேரடியாக பேச்சு வார்த்தை மூலம் சுமுக தீர்வு காணாமல் DSP அலுவலகத்தில் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல, பிரதிவாதியின் தாய்மாமா ஜெயபாலனிடம் சொன்னேன். அவர் பிரதிவாதியின் மனைவியிடம் பணம் வாங்கி கொண்டு எனக்கு எதிராக பணம் கொடுக்க விடாமல் பிரச்சனை செய்தார்.

பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் DSP அலுவலகத்தில் புகார் கொடுத்து தான் மிகுந்த மன வருத்தத்தில் 10 லட்சத்திற்கான பண வரவு செலவு முடிக்கப்பட்டது என சொல்லியயுள்ளார் என்றால் சொல்லியுள்ளார். ஆனால் அது தவறு பணம் தரவில்லை எனவே புகார் கொடுத்தேன். 10 லட்சம் வரவு செலவு முடிந்த பின்னர் தான் 29.09.2019 ல் வா.சா.ஆ.1 வழக்கு புரோநோட்டு அடிப்படையில் பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கியதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கும், பிரதிவரிதிகக்கும் இடையே 10 லட்சம் முன் வரவு செலவு சம்பந்தமாக காவல் நிலையம் வரை பிரச்சனை சென்று பிரச்சனை முடிந்துள்ள நிலையில் மீண்டும் 29.09.2019 ல் நான் 5 லட்சம் கடன் கொடுத்தாக சொல்வது ஏற்றுக்கொள்ளகூடிய வகையில் இ்ரலலை என்றால் சரியல்ல. பிரதிவாதி நேர்மையானவர் வாங்கிய கடனை திருப்பி தந்துவிடுவார் என மீண்டும் கொடுத்தேன்.

வா.சா.ஆ.1 புரோநோட்டில் பிரதிவாதி குடும்ப செலவுக்கு வாங்கினார் என எழுதியுள்ளது என்றால் சரிதான். குடும்ப செலவுக்கு வீர சேகர் கடன் வாங்கியதாக தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்குடன் சேர்த்து 4 வழக்கு மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன். இரண்டு புரோநோட்டுகள், 2 கிரைய ஒப்பந்த வழக்குகள், அனைத்தும் பணம் சம்பந்தப்பட்டது தான். நில மோசடி சம்பந்தமாக என்மீதும், என் மகள், மற்றும் மக்கள் அன்பன் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு நானும், மக்கள் அன்பனும் சிறையில் அடைக்கப்பட்டோம் என செய்திதாளில் கடந்த 16.04.2023 ல்

தினகரன் பத்திரிக்கையில் செய்தி வெளிவந்துள்ளது என்றால் சரிதான். ஆனால் அது பொய்யான வழக்கு அது சம்பந்தமாக குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது. அதை நான் நடத்தி வருகிறேன். பி.வா.ஆ.4 ஆகும். என்னுடன் கைது செய்யப்பட்ட மக்கள் அன்பன் தான் வா.சா.ஆ.1 புரோநோட்டில் சாட்சியாக கையெழுத்து போட்டார் என்றால் சரிதான். அவர் என் தோட்டத்தில் வேலை பார்க்கும் நபர் என்பதால் நான் கையொப்பம் போட சொன்னேன்.

புரோநோட்டை எழுதிய நபர் பரமராஜ் என்றால் சரிதான். ஆனால் பரமராஜை பிரதிவாதி தான் அழைத்து வந்தார். பரமராஜ் எந்த ஊரைச்சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது. பரமராஜ் கம்பத்தை சேர்ந்தவர் தான். பிரதிவாதி எதிர்வழக்குரையில் வழக்கு வா.சா–ஆ.1 புரோநோட்டில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும், அது மோசடியாக எனக்கு வேண்டிய நபர்களை வைத்து உற்பத்திசெய்யப்பட்டது என எதிர் வாதம் செய்துள்ளார் என்றால் அது தவறு ஆகும். அவர் நீதிமன்ற அனுமதி பெற்று புரோநோட்டை பார்த்த பின்பு கையெழுத்து தன்னுடையது அல்ல எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது தவறு ஆகும். பிரதிவாதி கையெழுத்தை மறைத்துள்ள நிலையில் அதை வல்லுநர் ஆய்வு மூலம் நிரூபணம் செய்ய நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அதை அவர் தான் எடுக்க வேண்டும். எனக்கு எந்த ஆட்சேபனையும்இல்லை. பிரதிவாதியின் கையெழுத்து போடவில்லை என்பதால் தான் நான் வல்லுநர் ஆய்வுக்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

என்னுடன் இருக்கும் மக்கள் அன்பன் தான் நான் தாக்கல் செய்துள்ள மற்ற வழக்கு ஆவணங்களிலும் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். நான் முனைவர் பட்டம் பெற்றுள்ள நிலையில் கம்பத்தில் எனக்கு படித்த நண்பர்கள் உள்ளார் என்றால் இல்லை. என்னை கம்பத்தில் உள்ளவர்கள் ஏமாற்றி விட்டார்கள். முந்தைய 10 லட்சம் கடன் சம்பந்தாக காவல் நிலையம் பிரச்சனை செய்து நான் பணத்தை வசூலித்த நிலையில் மீண்டும் 29.09.2019 ல் 5 லட்சம் கடன் கொடுத்தாக சொல்வது நம்பக்கூடிய வகையில் இல்லை என்றால் சரில்ல. நா ன் ஆசிரியர் தொழில் செய்வதால் மன்னிக்கும் குணம் உள்ளவன். அதனால் மீண்டும் பணம் கொடுத்தேன். நான் வீடு புகுந்து மிரட்டிய நிலையில் மீண்டும் கடன் வாங்கும் அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி கூடலூரில் தான் இருந்து வருகிறார் என்றால் இருக்கலாம். வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான்.

வழக்கறிவிப்பு அனுப்பினால் பிரதிவாதி என்மீது காவல்நிலையத்தில் என் மீது நடவடிக்கை எடுத்துவிடுவார் என்பதற்காக தான் நான் நோட்டீஸ் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. வழக்கு புரோநோட்டு பிரதிவாதி எழுதிக்கொடுக்கதாததாலும், 5 லட்சம் பணம் வாங்கவில்லை என்பதாலும், என்னுடைய வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.04.10 18:36:03 +05'30'

சார்பு நீதிபதி

உத்தமபாளையம்